# இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயம், சங்ககிரி
# (சார்பு நீதிமன்றம், சங்ககிரி)

முன்னிலை : **திருமதி. S. உமா மகேஸ்வரி, B.A., L.L.M.,**
இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர் / சார்பு நீதிபதி, சங்ககிரி.

திருவள்ளுவராண்டு 2053, சுபகிருது வருடம், மார்கழித்திங்கள் 19 ம் நாள் செவ்வாய் கிழமை
2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 3 ம் நாள் செவ்வாய் கிழமை

**இ.வி.கோ.ம.எண். 480/2012**
**C.N.R. No: TNSA07-000024-2012**

சாந்தி, க/பெ சுப்ரமணி, (வயது 37)
வவ்வால் தோப்பு, மின்னாம்பள்ளி, காரிப்பட்டி அஞ்சல்,
வாழப்பாடி வட்டம், சேலம் மாவட்டம்.
தற்போதைய முகவரி - மாரியம்மன் கோவில் அருகில்,
காகாபாளையம் அஞ்சல், சங்ககிரி வட்டம்,
சேலம் மாவட்டம். ..மனுதாரர்

**/எதிராக/**

1. வெங்கடாசலம், த/பெ முத்துசாமி,
   7/221, வரைடேரி காடு, மேட்டுப்பட்டி அஞ்சல்,
   சேலம் மாவட்டம் - 636 103.
2. மேலாண்மை இயக்குநர்,
   தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம் (சேலம் கிளை),
   12, இராமகிருஷ்ணா சாலை, சேலம் -7 ..எதிர்மனுதாரர்கள்

இம்மனு என் முன்பாக 22.12.2022 தேதியன்று இறுதி விசாரணைக்கு வரப்பெற்று, மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.G.கோபாலகிருஷ்ணன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமனுஜம் அவர்களும், ஆஜராகியும் எதிருரை தாக்கல் செய்யாததாலும், எதிர்மனுதாரர்களை தீர்ப்பாயத்தில் அழைத்த போது ஆஜராகாத காரணத்தினாலும், எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டும், மனுதாரர் தரப்பு வாதுரைகள் கேட்கப்பட்டும், மனு, மனுதாரர் தரப்பு சாட்சியங்கள் மற்றும் மனு ஆவணங்களை பரிசீலனை செய்தும், இந்நாள் வரையில் இந்த தீர்ப்பாயத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்ததுமான இம்மனுவில் இன்று இந்த தீர்ப்பாயம் ஆய்ந்து பிறப்பிக்கும்,

## <u>உத்தரவு:-</u>

இம்மனு கடந்த 06.06.2012 ம் தேதி அன்று நடந்த சாலை விபத்தில், மனுதாரருக்கு ஏற்பட்ட காயத்திற்கு இழப்பீடாக ரூ.15,00,000/-ம், பின்வட்டி மற்றும் செலவுத்தொகை கோரி மோ.வா.சட்டம் பிரிவு 166 மற்றும் உ/இ மோட்டார் வாகன விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாய விதி 3-ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. <u>மனுவின் சுருக்கம்:</u>

கடந்த 06.06.2012ம் தேதி பகல் 11.00 மணியளவில் மனுதாரர் சேலம் - பேலூர் ரோட்டில் கூட்டாத்துப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் சாலையின் இடதுபுற ஓரமாக மண்பகுதியில் சாலை விதிகளை மதித்து கூட்டாத்துப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது அரசு பேருந்து ரூட் நெம்பர் 54, TN 30 N 0221 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் திடீரென்று எந்தவித சிக்னலும் கொடுக்காமல், பின்புறமாக ரிவர்ஸில் எடுத்து வந்து மனுதாரரின் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தில் மனுதாரர் கீழே விழுந்ததில் மனுதாரின் இடதுகாலில் பேருந்து ஏறியதில் மனுதாரருக்கு இடதுகால் முழங்காலுக்கு கீழ் சிதைந்துவிட்டதாகவும், மேலும் உடலெங்கும் பலத்த இரத்த காயங்கள் ஏற்பட்டதாகவும், தனக்கு ஏற்பட்ட ஊனத்திற்கும், வருமான இழப்பிற்கும், உடல்வலி, மனவேதனை மருத்துவசெலவு ஆகியவற்றிற்கு ரூ.15,00,000/- இழப்பீடாக வழங்க வேண்டுமென மனுதாரரால் கோரப்பட்டுள்ளது.

2. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.P.ராமனுஜம் அவர்கள் 20.08.2013ம் தேதி அன்று ஆஜராகியும், 24.07.2015ம் தேதி வரை எதிருரை தாக்கல் செய்யாததாலும், எதிர்மனுதாரர்களை தீர்ப்பாயத்தில் அழைத்த போது ஆஜராகாத காரணத்தினாலும், எதிர்மனுதாரர்கள் 24.07.2015 அன்று தோன்றாத்தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளனர்.

3. <u>**இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில்,**</u>

1) இம்மனுவில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம்?
2) விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் ?
3) மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு?

4. இம்மனுவில் கூறியுள்ள சங்கதிகளை நிரூபிக்க மனுதாரர் தரப்பில் ம.சா.1 முதல் 3 சாட்சிகள் விசாரிக்கப்பட்டும், ம.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. ம.சா.3ன் மூலம் சா.சா.ஆ.1 ஆவணம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகி விட்டதால் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை எண் :- 1</u>**

இம்மனுவில் கூறப்பட்ட விபத்திற்கு யாருடைய கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரதை காரணம் என்ற பிரச்சினையைப்பற்றி ஆராய்கையில், மனுதாரர் தன்னுடைய மனுவிலும், முதல் விசாரணை சாட்சிய வாக்குமூலத்திலும் தான் சம்பவத்தன்று சேலம் - பேலூர் ரோட்டில் கூட்டாத்துப்பட்டி பஸ் ஸ்டாப் அருகில் சாலையின் இடதுபுற ஓரமாக மண்பகுதியில் சாலை விதிகளை மதித்து கூட்டாத்துப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் நின்று கொண்டிருந்த போது அரசு பேருந்து ரூட் நெம்பர் 54, TN 30 N 0221 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் திடீரென்று எந்தவித சிக்னலும் கொடுக்காமல், பின்புறமாக ரிவர்ஸில் எடுத்து வந்து தன் மீது மோதி விபத்தினை ஏற்படுத்தியதாகவும், மேற்படி விபத்தில் தான் கீழே விழுந்ததில் தனது இடதுகாலில் பேருந்து ஏறியதில் தனது இடதுகால் முழங்காலுக்கு கீழ் சிதைந்துவிட்டதாகவும், மேலும் உடலெங்கும் பலத்த இரத்த காயங்கள் ஏற்பட்டதாகவும், கூறியுள்ளார். மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் விபத்திற்கு காரணம் எதிர்மனுதாரரின் ஓட்டுநரே என்று கூறி, எதிர்மனுதாரர் ஓட்டுநரின் மீது பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையை ம.சா.ஆ.1 ஆகவும், விபத்து பதிவேடு ம.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் ம.சா.ஆ.4 ஆகவும், பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.5 ஆகவும், குற்ற இறுதியறிக்கை ம.சா.ஆ.6 ஆகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதுரை முன்வைத்தார். இது குறித்து மேற்படி ஆவணங்களை இந்த தீர்ப்பாயம் பரிசீலிக்கையில், ம.சா.ஆ.1 ல் எதிரியாக TN 30 N 0221 என்ற பதிவு எண் கொண்ட அரசு பேருந்தின் ஓட்டுநர் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.6 குற்ற இறுதியறிக்கையில், 1ம் எதிர்மனுதாரர் வெங்கடாசலம் என்பவர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. ம.சா.ஆ.4 மாதிரி வரைபடத்தை ஆராய்கையில், விபத்தானது சாலையின் மண் பகுதியில் நடைபெற்றுள்ளது தெரிய வருகிறது. விபத்தை நேரில் பார்த்த செல்வகுமார் என்பவர் ம.சா.3 ஆக சாட்சியம் அளித்துள்ளார். ம.சா.3 தனது முதல் விசாரணையில் மனுவின் சங்கதிகளை உறுதிப்படுத்தி சாட்சியம் அளித்துள்ளார். எனவே மேற்கண்ட ஆவணங்களின் மூலமாக தங்கள் தரப்பை நிரூபித்துள்ளதாக மனுதாரர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் அவர்கள் வாதுரை முன் வைத்தார்.

6. இந்நிலையில், எதிர்மனுதாரர்கள் தீர்ப்பாயத்தில் ஆஜராகி சம்பவ விபத்தை குறித்தோ, மனுதாரர் கட்சியை மறுத்தோ வழக்கினை நடத்த ஆஜராகவில்லை. எதிர்மனுதாரர்கள் தோன்றாத்தரப்பினர்களாகி உள்ளனர். ஆகவே மனுதாரர் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கு விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் அதிவேக, அஜாக்கிரதையே காரணம் என பிரச்சினை எண் 1 ஐ பொறுத்து இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

7. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை எண்: 2</u>**

விபத்திற்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்ட நபர் யார் என்ற பிரச்சனையைப்பற்றி ஆராய்கையில், ஏற்கனவே 1ம் எதிர்மனுதாரரின் அஜாக்கிரதை விபத்திற்கு காரணம் என்று முடிவு செய்துள்ள நிலையில், 1ம் எதிர்மனுதாரர் ஓட்டி வந்த பேருந்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.5 ஐ பரிசீலிக்கையில் மேற்படி பேருந்தானது 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்திற்கு சொந்தமானது என்பது தெரிய வருகிறது. எனவே 2ம் எதிர்மனுதாரரே மனுதாரருக்கு இழப்பீடு கொடுக்க வேண்டும் என இப்பிரச்சனை எண் 2 க்கு இந்த தீர்ப்பாயம் தீர்வு காண்கிறது.

8. **<u>தீர்வுக்குரிய பிரச்சனை எண்: 3</u>**

மனுதாரருக்கு அவர் கோரும் இழப்பீட்டு தொகை கிடைக்கத்தக்கதா? ஆம் எனில் எவ்வளவு என ஆராய்கையில் மனுதாரருக்கு விபத்து சமயத்தில் 37 வயது என மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அதற்கான ஆவணங்கள் எதுவும் மனுதாரர் தரப்பில் முன்னிலைப்படுத்தப்படவில்லை. இருந்த போதிலும், ம.சா.ஆ.3 விபத்து பதிவேட்டில் மனுதாரரின் வயது 37 என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆகவே மனுதாரரின் வயது 37 என இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரர் விபத்தின் போது விவசாய கூலி வேலை செய்தும், பால் விற்பனை செய்தும் மாதம் ரூ.8,000/- சம்பாதித்து வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் மனுதாரருடன் விவசாய கூலி வேலைக்கு சென்ற லட்சுமி என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.2 தனது முதல் விசாரணை வாக்குமூலத்தில் தானும், மனுதாரரும் விவசாய கூலி வேலைக்கு சென்றதாகவும், மனுதாரர் 3 கறவை மாடுகள் வைத்து பால் வியாபாரம் செய்து வந்த விபரம் தனக்கு தெரியும் என்றும் சாட்சியத்தில் குறிப்பிட்டுள்ளார். ஆனால் அதற்கான ஆவணம் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. மனுதாரர் விவசாய வேலைக்கு தினக்கூலியாக ரூ.200/- பெற்றிருக்க கூடும் என்பதால், மனுதாரரது தோராய வருமானமாக 2012-ம் வருடம் விவசாய கூலி வேலை செய்து மாதம் ரூ.5,000/- வருமானம் பெற்றிருக்கக்கூடும் என இந்த தீர்ப்பாயம் நிர்ணயிக்கிறது.

9. விபத்தினால் மனுதாரருக்கு ஏற்பட்ட காய தன்மை, சிகிச்சைக்கான விபரங்களை காண்பிக்கும் வகையில் ம.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன. ம.சா.ஆ.2 காய சான்றில் மனுதாரருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது தெரிய வருகிறது.

10. மனுதாரர் மருத்துவ குழுமத்திற்கு முன்பு ஆஜராகி ஊன சான்று பெறவில்லை. மனுதாரர் தரப்பில் தமிழக அரசால் ஊனமுற்றோருக்காக வழங்கப்பட்ட அதிகாரம் வழங்கும் புத்தகம் ம.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. ம.சா.ஆ.8 ல் மனுதாரருக்கு ஏற்பட்ட ஊனம் 65% என குறிப்பிடப்பட்டுள்ளது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 2021 (1) **TN MAC Page** 611 எனும் வழக்கில் வழங்கிய வழிகாட்டுதலின் படி 2012 ல் ஏற்பட்ட

விபத்திற்கு 1% ஊனத்திற்கு ரூ.3,000/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதை இந்த தீர்ப்பாயம் ஏற்றுக்கொள்கிறது. மனுதாரருக்கு ஊன சதவிகிதமாக 65% நிர்ணயிக்கப்பட்டுள்ளதால் மேற்கூறிய மொழிந்துரையின் படி (65 x ரூ.3,000/-) ரூ.1,95,000/- மனுதாரருக்கு காயத்திற்கான இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

11. மனுதாரரின் புகைப்படம் ம.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதில் மனுதாரருக்கு இடது கால் முட்டிக்கு கீழ் உள்ள காலில் பாதத்திற்கு மேல்புறத்திலே துண்டிக்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. எனவே மனுதாரர் வாழ்நாள் முழுவதும் ஒரு கால் இல்லாமல் சிரமப்படக்கூடும் என்பதால், அவருக்கு ஏற்பட்ட வலி மற்றும் வேதனைக்காக ரூ.1,00,000/-ஐ இழப்பீடாக வழங்க இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

12. மனுதாரருக்கு விபத்தின் காரணமாக கொடுங்காயம் ஏற்பட்டதால், சிகிச்சைக்காக மருத்துவமனை சென்று, வர ஏற்பட்ட போக்குவரத்து செலவினத்திற்காக ரூ.5,000/- இழப்பீடாக வழங்கலாம் என இந்த தீர்ப்பாயம் கருதுகின்றது.

13. மனுதாரருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக அவர் ஊட்டச்சத்து மிக்க உணவு எடுத்திருக்க வேண்டியது அவசியம் என்பதால் ஊட்டச்சத்திற்காக ரூ.10,000/- இழப்பீடு பெற அருகதையுடையவர் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

14. மனுதாரர் தனக்கு காலில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்திருக்கக்கூடும் என்பதால், அவர் சுமார் 6 மாதம் வேலைக்கு சென்றிருக்க இயலாது. எனவே, விபத்து சமயத்தில் அவர் வேலை செய்யாததற்கு ஏற்பட்ட வருமான இழப்பீடாக 6 x ரூ.5,000/- = ரூ.30,000/- கொடுக்கலாம் என்று இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

15. மனுதாரர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுள்ளதால், மருத்துவ ரசீதுகள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே மருத்துவ செலவினத்திற்கனெ இழப்பீடு வழங்கப்படவில்லை.

**<u>கணக்கீடு</u>**

| | |
|---|---|
| ஊனத்திற்கான இழப்பீடு | ரூ.1,95,000.00 |
| வலி மற்றும் வேதனைக்கான இழப்பீடு | ரூ.1,00,000.00 |
| சிகிச்சையின் போது வருமான இழப்பு | ரூ. 30,000.00 |
| போக்குவரத்து செலவினம் | ரூ. 5,000.00 |
| ஊட்டச்சத்து | ரூ. 10,000.00 |
| மொத்தம் | ரூ.3,40,000.00 |

16. ஆகவே, விபத்தினால் ஏற்பட்ட இழப்பிற்கு மொத்த இழப்பீடாக ரூ.3,40,000/-ஐ மனுதாரருக்கு 2 ம் எதிர்மனுதாரர் வழங்க வேண்டும் என இந்த தீர்ப்பாயம் முடிவு செய்கின்றது.

17. இறுதியாக,

1. இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டும்,

2. மனுதாரருக்கு ரூ.3,40,000/-(ரூபாய் மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்)ஐ மோட்டார் வாகன விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்கு இழப்பீடாக 2 ம் எதிர்மனுதாரர் வழக்கு செலவுத்தொகையுடன் வழங்க வேண்டுமென்றும்,

3. மனு தள்ளுபடி செய்யப்பட்ட காலங்களுக்கு மனுதாரருக்கு வட்டி கிடைக்கத்தக்கதல்ல என்றும்,

4. மேற்படி இழப்பீட்டு தொகைக்கு வழக்கு தாக்கல் நாள் முதல் 7.5% வட்டி செலுத்த வேண்டுமென்றும், 2 ம் எதிர்மனுதாரர் இந்த இழப்பீட்டு தொகையை இரண்டு மாதங்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றம், கணக்கு எண் : 36192330088, IFSC எண் SBIN0000994 என்ற வங்கி கணக்கில் NEFT/RTGS முறையில் நேரடி வங்கி மாற்றம் மூலம் செலுத்த வேண்டுமென்றும்,

5. மேற்கண்ட வகையில் தொகை செலுத்தப்பட்டவுடன் மேற்படி இழப்பீட்டு தொகை முழுவதையும் மனுதாரர் வட்டியுடன் பெற்றுக்கொள்ளலாம் என்றும்,

6. வழக்கறிஞர் கட்டணமாக ரூ.9,800/- நிர்ணயிக்கப்பட்டும்,

7. இம்மனுதாரர் வழக்கு தாக்கல் செய்யும் போது நீதிமன்ற கட்டணமாக ரூ.10/-ஐ மட்டும் செலுத்தியிருக்கிறார். மீதமுள்ள நீதிமன்ற கட்டணத்தை செலுத்த இடை மனு எண் 2109/2012 தாக்கல் செய்து, 21.08.2012 ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் படி விலக்கு பெற்றிருப்பதால், மீதமுள்ள நீதிமன்ற கட்டணமான ரூ.2,763/- மனுதாரர் 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்றும்,

8. மனுதாரர் வங்கி கணக்கு விபரத்தை கொடுத்தவுடன் அவருக்கு சேர வேண்டிய தொகை அவர் வங்கி கணக்கில் செலுத்தி வைக்க வேண்டுமென்றும் உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணிபொறியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்ட பின்னர் 2023 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 3 ம் நாளான இன்று என்னால் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

## மற்ற விபரங்கள்

| | |
|---|---|
| மனு தாக்கலான தேதி | 16.08.2012 |
| உத்தரவு நாள் | 03.01.2023 |
| இழப்பீட்டுத்தொகை | ரூ.3,40,000/-(ரூபாய் மூன்று லட்சத்து நாற்பதாயிரம் மட்டும்) |
| வட்டி விகிதம் மற்றும் செலுத்தப்பட வேண்டிய காலம் | மனு தேதியான 16.08.2012 லிருந்து தொகை முழுவதும் வசூலாகும் தேதி வரை (தவறுகையினால் மனு தள்ளுபடி ஆகியிருந்த காலங்கள் தவிர்த்து) ஆண்டு ஒன்றுக்கு 7.5% வட்டி மற்றும் இம்மனுவின் செலவுத் தொகையும் சேர்த்து இன்றிலிருந்து 60 நாட்களுக்குள் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் வைப்பீடு செய்ய வேண்டும். |
| மொத்த நீதிமன்ற கட்டணம் | ரூ.2,773/- |
| செலுத்திய நீதிமன்ற கட்டணம் | ரூ.10/- |
| மனுதாரர் செலுத்த வேண்டிய நீதிமன்ற கட்டணம் | ரூ.2,763/- |
| நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கான காலம் | மனுதாரர் இம்மனுவிற்காக செலுத்த வேண்டிய பாக்கி நீதிமன்ற கட்டணமான ரூ.2,763/-ஐ உத்தரவு தேதியான 03.01.2023 லிருந்து 15 நாட்கள் காலகெடுவிற்குள் நீதிமன்றத்தில் செலுத்த வேண்டும். |
| அனுமதிக்கப்பட்ட செலவுத்தொகை | ரூ.7,630/- |
| மனு தள்ளுபடியான காலம் ஏதேனும் உண்டா | இல்லை |

## செலவுத்தொகைப் பட்டியல்

| மனுதாரர்கள் தரப்பு செலவுத் தொகை பட்டியல் | தொகை | |
|---|---|---|
| | ரூ. | பை. |
| நீதிமன்ற கட்டணம் | 2,773 | 00 |
| வக்காலத்து கட்டணம் | 5 | 00 |
| சான்றாவண கட்டணம் | 30 | 00 |
| வழக்கறிஞர் கட்டணம் | 9,800 | 00 |
| கட்டளை சார்வு கட்டணம் | 69 | 00 |
| எழுத்துக்கூலி | 200 | 00 |
| மொத்தம் | 12,877 | 00 |

(இம்மனுவின் செலவுத்தொகையான ரூ.12,877/-ஐ 2ம் எதிர்மனுதாரர் மனுதாரருக்கு செலுத்த உத்தரவிடப்படுகிறது.)

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமை தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

**இணைப்பு:-**

(1) **மனுதாரர் தரப்பு சாட்சிப்பட்டியல்-**

ம.சா.1 .. திருமதி. சாந்தி

(2) **எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிப்பட்டியல் -** இல்லை

(3) **மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல் -**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 .. | முதல் தகவல் அறிக்கை | - சான்று நகல் |
| ம.சா.ஆ.2 .. | மருத்துவ கருத்து | - சான்று நகல் |
| ம.சா.ஆ.3 .. | விபத்து பதிவேடு | - சான்று நகல் |
| ம.சா.ஆ.4 .. | மாதிரி வரைபடம் | - சான்று நகல் |
| ம.சா.ஆ.5 .. | TN 30 N 0221 என்ற வாகனத்திற்கான மோட்டார் வாகன ஆய்வறிக்கை | - சான்று நகல் |
| ம.சா.ஆ.6 .. | குற்ற இறுதியறிக்கை | - சான்று நகல் |
| ம.சா.ஆ.7 .. | கால் அறுவை சிகிச்சை மூலம் அகற்றப்பட்டதற்கான புகைப்படங்கள் இரண்டு குறுந்தகடு | - அசல் |
| ம.சா.ஆ.8 .. | தமிழக அரசால் ஊனமுற்றோருக்காக வழங்கப்பட்ட அதிகாரம் வழங்கும் புத்தகம் | - அசல் |
| ம.சா.ஆ.9 .. | ம.சா.2 ன் ஆதார் அட்டை | - நகல் |

(4) **எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணப்பட்டியல்** - இல்லை

(5) **சாட்சி தரப்பு சான்றாவணப்பட்டியல் -**

| | | |
|---|---|---|
| சா.சா.ஆ.1 .. | ம.சா.3 ன் ஆதார் அட்டை | - நகல் |

(ஒப்பம்/- S. உமா மகேஸ்வரி)
**இயக்கவூர்தி விபத்துக்கள் கோருரிமைத் தீர்ப்பாயர்,**
**(சார்பு நீதிபதி, சங்ககிரி)**

குறிப்பு:-

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 11.05.2020ம் தேதி Tr.C.M.P. Nos. 264 to 281 of 2020 M/s Cholamandalam MS General Insurance Company Limited //Vs// Mr.Ayyannar.S and Other என்ற வழக்கில் வழங்கிய உத்தரவுக்கிணங்க தனியாக தீர்ப்பாணை தயாரிக்கப்படவில்லை. அதில் குறிப்பிடப்பட்டுள்ள விவரங்கள் இந்த உத்தரவில் இணைக்கப்பட்டுள்ளன.